செ.கு.எண்: 163

நாள்: 30.04.2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் "மே தின" வாழ்த்துச் செய்தி

உழைக்கும் கரங்களின் ஒற்றுமையை உணர்த்தி, உழைப்பின் பெருமையை உலகுக்கு பறை சாற்றும் தொழிலாளர் தினமாகிய மே தினத் திருநாளில், தொழிலாளர் பெருமக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த மே தின வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உரிமைகள் மறுக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்ட உழைக்கும் வர்க்கம் தங்களின் உரிமைக்காகவும், நலனிற்காகவும், பல நூற்றாண்டுகளாகப் போராடி அடிமை விலங்கினை உடைத்தெறிந்து தங்கள் உரிமைகளை மீட்டு எடுத்த திருநாள் மே தின திருநாளாகும்.

"இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும்
இலக்கணம் படைத்தவன் தொழிலாளி!
உருக்குப்போன்ற தன் கரத்தையே நம்பி
ஓங்கி நிற்பவன் தொழிலாளி"

என்று புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தொழிலாளர்களின் சிறப்புகளை தனது உணர்ச்சிமிகு பாடலின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தியாவிலேயே தமிழகம் அனைத்து துறைகளிலும் முதன்மை மாநிலமாக விளங்க வேண்டும் என்ற எனது லட்சியப் பயணத்திற்கு தொழிலாளர்கள் தங்களது முழு ஒத்துழைப்பினை நல்கிட வேண்டும்.

உதிரத்தை வியர்வையாக்கி உழைக்கும் தொழிலாளர் பெருமக்கள் அனைவருக்கும் என் இதயம் நிறைந்த மே தின நல்வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9